செய்தி வெளியீடு எண்:350 நாள்: 30.06.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (30.06.2021) இருங்காட்டுக்கோட்டை, ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.

---

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களே,
மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களே,
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களே,
கொரிய நாட்டின் துணைத் தூதர் திரு. ஓ.எஸ். க்யோன் அவர்களே,
ஹூண்டாய் மோட்டார் கார் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. கிம் அவர்களே,
இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கக்கூடிய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே,
மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே,
ஹூண்டாய் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அன்புக்குரிய தொழிலாள நண்பர்களே,
உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை, நன்றியை, வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலத்தில் மருத்துவ நெருக்கடி மட்டுமல்லாமல், நிதி நெருக்கடியையும் சமாளிக்க வேண்டிய சூழல் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இந்தச் சூழலில், அரசுக்குத் தோள் கொடுக்குமாறு, தமிழ்நாட்டு மக்களிடத்தில் முதலமைச்சர் என்கின்ற முறையில் நான் கோரிக்கை வைத்தேன். பல்வேறு தொழில் நிறுவனங்கள் இதில் பங்கெடுத்து, பல்வேறு கோணங்களில் பல உதவிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

அதில் குறிப்பாக, ஹூண்டாய் நிறுவனம் சார்பில் 5 கோடி ரூபாய் நிதி அளித்து அரசுக்குத் துணை நின்றிருக்கின்றது, அதற்காக முதலில் நான் இந்த நிறுவனத்திற்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, மருத்துவ உபகரணங்கள், மாஸ்க்குகள் மற்றும் சானிடைசர்களை இந்த ஹூண்டாய் நிறுவனம் வழங்கியிருக்கிறது. இந்த நிறுவனத்திற்கும், இதன் நிர்வாகப் பொறுப்பில் இருக்கின்ற அதிகாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1996 - ஆம் ஆண்டுக்கு முன்னால், இந்தச் சாலையில் பயணம் செய்கிறவர்களுக்குத் தெரியும், பூந்தமல்லியைத் தாண்டினால் நகரம் இருப்பது போலவே தெரியாது. ஆனால், இன்றைக்கு பூந்தமல்லியைத் தாண்டினால் பல்வேறு தொழிற்சாலைகள் உருவாகியிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. 1996ஆம் ஆண்டுக்குப் பிறகு சென்னையைச் சுற்றி பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கியவர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள். சென்னையிலிருந்து திருப்பெரும்புதூர் வரை, சென்னையிலிருந்து செங்கல்பட்டு வரை, சென்னையிலிருந்து சோழிங்கநல்லூர் வரை, இப்படி பல்வேறு தொழிற்சாலைகள் பல பகுதிகளில் 1996 - ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதைத் தொடர்ந்து 2006ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதேபோலத்தான், இன்றைய தமிழ்நாடு அரசும் உருவாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்த, அத்தகைய சூழலில்தான் இந்த ஹூண்டாய் நிறுவனத்திற்கு நான் வந்திருக்கிறேன். 1998ஆம் ஆண்டு முதன்முதலாக ஹூண்டாய் கார் நிறுவனத்தின் உற்பத்தியைத் தொடங்கி வைத்தவர் முதலமைச்சராக இருந்த நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர்

அவர்கள்தான். 2008ஆம் ஆண்டு இரண்டாவது யூனிட்டை தொடங்கி வைத்தவரும் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள்தான். கடந்த 2011ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இதே ஹூண்டாய் நிறுவனத்திற்கு, அப்போது நான் துணை முதலமைச்சராக இருந்த நான் அந்த நிகழ்ச்சிக்கு வந்தேன். விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டையில் நிறுவப்பட்ட தொழிற்பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கான விடுதிக் கட்டடத்தை காணொலிக் காட்சி வாயிலாக நான் திறந்து வைத்தேன். பொதுவாகவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எதைத் தொடங்கிவைத்தாலும் அது எந்த அளவிற்கு செழிக்கும், பலருக்குப் பயன்படும், காலங்கள் கடந்து நிற்கும் என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. அதில் குறிப்பிடத்தக்க உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், ஹூண்டாய் நிறுவனம் ஒன்று என்று நாம் பெருமையோடு சொல்லியாக வேண்டும்.

ஹூண்டாய் கார் நிறுவனத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இந்த நிறுவனத்தை எதற்காகப் பாராட்டினார்கள் என்று சொன்னால், 1,238 பேர்களுக்கு நீங்கள் வேலை கொடுத்தீர்கள், அதற்காகப் பாராட்டினார். அதில் 90 விழுக்காடு நபர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் என்பதைச் சொல்லி பாராட்டியிருக்கிறார். இன்னும் சொன்னால், இந்த நிறுவனம் அமைப்பதற்காக இந்த வட்டாரத்தைச் சார்ந்த இருங்காட்டுக்கோட்டை, கீவளூர், தண்டலம், செட்டிமேடு ஆகிய ஊர்களைச் சார்ந்த மக்களில் 637 பேர்களுக்கு வேலை கொடுத்தீர்கள், அதையெல்லாம் குறிப்பிட்டு கலைஞர் அவர்கள் அன்றைக்கு பாராட்டு தெரிவித்தார்கள்.

கார் தயாரிப்பு நிறுவனமாக மட்டுமல்லாமல், சேவை மனப்பான்மையோடு ஹூண்டாய் நிறுவனம் இயங்கி வருவதை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1998ஆம் ஆண்டே பாராட்டியிருக்கிறார்கள். அதே சேவை மனப்பான்மையோடு நாங்கள் இன்னும் இருக்கிறோம் என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் 5 கோடி ரூபாயை கொரோனா தடுப்பு நிதியாக நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள்

என்பது போற்றத்தக்கது. என்னைப் பொறுத்தவரையில், ஹூண்டாய் நிறுவனத்தை தமிழ்நாட்டில் அதிக முதலீடு செய்த நிறுவனமாக மட்டுமல்ல, அதிக கார்கள் உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனமாக மட்டுமல்ல, திருப்பெரும்புதூர் பகுதியை உலக வரைபடத்திலே ஒரு மிகப்பெரிய உற்பத்தி மையமாக மாற்றியதில் முக்கியப் பங்குகொண்ட நிறுவனமாக இந்த ஹூண்டாய் நிறுவனத்தைப் பார்க்கிறேன். அதற்காக உங்களைப் பாராட்ட, இந்த அளவிற்கு முன்னேறுவதற்கு உழைத்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரை 1 கோடி கார்களை ஹூண்டாய் கார் நிறுவனம் உற்பத்தி செய்திருப்பது என்பது ஒரு மிகப்பெரிய சாதனை. மிகக்குறுகிய காலத்திலேயே, இந்தியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய கார் உற்பத்தியாளர் என்ற பெருமையையும், வெளிநாடுகளுக்கு கார்களை ஏற்றுமதி செய்வதில் முதன்மை நிறுவனம் என்ற பெருமையையும் ஹூண்டாய் கார் நிறுவனம் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டில் இதுவரை 31.3 இலட்சம் கார்களை உற்பத்தி செய்து 88 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறீர்கள். இதனால் உங்கள் நிறுவனம் மட்டும் வளரவில்லை, தமிழ்நாடும் சேர்ந்து வளர்ந்திருக்கிறது, இதுதான் குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மகத்தான சேவையை ஆற்றிக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் சேவையை இன்னும் கூடுதலாக விரிவுபடுத்த வேண்டும் என்றும், ஹூண்டாய் நிறுவனத்தைப்போலவே மற்ற நிறுவனங்களும் தமிழ்நாட்டில் தங்களது முதலீட்டை அதிகப்படுத்த வேண்டும் என்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அரசு, தமிழ்நாட்டை தெற்கு ஆசியாவிலேயே முதலீடுகளுக்கு மிகவும் உகந்த மாநிலமாக மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்கான அடிப்படைத் திட்டமிடுதலை நாங்கள்

தொடங்கியிருக்கிறோம். உலகப் புகழ்பெற்ற பொருளாதார அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக்குழுவை அமைத்திருக்கிறோம். இது, தொழில் நிறுவனங்களுக்கு மாபெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்நாட்டின் மீது உலக ஊடகங்களின் கவனம் குவிய, இந்த அறிவிப்பு அடித்தளம் இட்டிருக்கிறது. இந்தக் குழு அனைத்து பொருளாதார மேதைகளாலும் பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் குழுவின் ஆலோசனையைப் பெற்று தமிழ்நாடு அரசு நிச்சயமாக செயல்படும். திட்டங்களை வகுப்பதற்காகவும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு முடிவுகளை, ஆய்வுகள் செய்து அனைத்து வகையான மேம்பாடுகளையும் நோக்கிச் செல்ல தமிழ்நாடு அரசு உறுதி கொண்டிருக்கிறது.

முதலீடுகளை அதிகம் பெற முதலில் தேவையானது நிதியல்ல, நம்பிக்கைதான், அதுதான் முதல் முதலீடு. அந்த நம்பிக்கை கொண்ட அரசாக தமிழ்நாடு அரசு அடையாளம் காணப்படுவதைப் பார்க்கும்போது, எனக்கு உள்ளபடியே பெருமையாக இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்து இன்னும் இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை, அதற்குள் இப்படிப்பட்ட நம்பிக்கையை நாங்கள் பெற்றிருக்கிறோம். தொழில் துறையில் தொழில்நுட்ப மேம்பாட்டினை உறுதிப்படுத்த வேண்டும், பன்முகத் தொழில் வளர்ச்சியை உருவாக்க வேண்டும், புதிய தொழிற்சாலைகளை ஏராளமாக உருவாக்க வேண்டும், ஏற்கனவே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளை விரிவுபடுத்த வேண்டும், ஒரே இடத்தில் தொழில்கள் குவிந்துவிடக் கூடாது, அனைத்து மாவட்டங்களிலும் தொழில்கள் பரவலாக அமைக்கப்பட வேண்டும், அப்படி அமைக்கப்படும் தொழிற்சாலைகளில் அந்தந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள், தமிழ்நாட்டு இளைஞர்கள் பெருவாரியான வேலைவாய்ப்பைப் பெற வேண்டும். தமிழ்நாட்டை நோக்கி தொழிற்சாலைகள் முதலீடு செய்ய முன்வரும் சூழல் உருவாக்கப்பட வேண்டும், தொழில் தொடங்க சாதகமான பகுதியாக அனைத்து மாவட்டங்களையும், நகரங்களையும் மாற்ற வேண்டும் என்கிற அந்த

இலக்குகளோடு அரசு செயல்படத் தொடங்கியிருக்கிறது. இந்த இலக்கை நிச்சயமாக விரைவில் அடைவோம். அதற்கு ஹூண்டாய் நிறுவனம் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். தங்களைப் போலவே, மற்ற நிறுவனங்களும் தமிழ்நாட்டில் தொழில்களைத் தொடங்க ஹூண்டாய் நிறுவனம் ஊக்கப்படுத்த வேண்டும். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள், தமிழ்நாட்டைத் தொழில் வளர்ச்சி மிகுந்த மாநிலமாக ஆக்கும் பணியை சிறப்பாக முன்னெடுத்து வருகிறார். ‘‘இந்தியாவின் டெட்ராய்ட்’’ என்று சென்னை அழைக்கப்படும் அளவிற்கு கார் உற்பத்தியில், அன்றைய திமுக ஆட்சியில் முன்னேற்றம் கண்டோம். இந்தியாவில் தொழில் வளர்ச்சி மிகுந்த மாநிலம் என்ற பெயரையும், புகழையும் நாம் மீண்டும் அடைய வேண்டும்.

1998ஆம் ஆண்டு ஹூண்டாய் நிறுவனத்தின் முதலாவது உற்பத்தியை தொடங்கிவைத்துப் பேசிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், "தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு ஐந்தாவது இடத்தில் இருக்கிறது, அதனை மூன்றாவது இடத்திற்கு கொண்டு வருவேன்" என்று உறுதி எடுத்தார்கள், அந்த இலக்கை அடைந்தார்கள். அதேபோல், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை முதலாவது இடத்திற்கு கொண்டுவருவேன் என்று நான் இந்த நிகழ்ச்சியில் உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறேன். அந்த உறுதியை நிறைவேற்ற ஹூண்டாய் உள்ளிட்ட அனைத்து தொழில் நிறுவனங்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தொழில் வளர்ச்சியின் மூலமாக, நாடும், மக்களும், சமூகமும் முன்னேறுகிறது. எனவே, தொழிற்சாலைகளை ஒரு வர்த்தகமாக பார்க்காமல், வாழ்க்கையாக பார்த்து எங்களது செயல்பாடுகள் அமையும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஹூண்டாய் கார் நிறுவனத்தின் சாதனைகளுக்கெல்லாம் காரணமாக விளங்கும் அதனுடைய ஊழியர்களுக்கும், அலுவலர்களுக்கும், தொழிலாளத் தோழர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களை மீண்டும் ஒருமுறை

தெரிவித்து, ஹூண்டாய் கார் நிறுவனம் மேலும், மேலும் வளர்ச்சியடைய என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

- - - -

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9